மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் தொகுதி குறித்த பிரச்சினைகள் இருக்கலாம். சென்னையிலே இருக்கிற வர்களுக்கு மட்டுமல்ல, இந்த அவையிலே இருக்கிற 234 உறுப் பினர்களுக்கும் தொகுதிப் பிரச்சினைகள் இருக்கலாம். அவை களையெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி கிளப்பக் கூடிய மரபை உருவாக்காதீர்கள். அப்படிப்பட்ட மரபு எந்த அவையிலும் இல்லை. பாராளுமன்றத்திலேயும் இல்லை. ஆகவே புது மரபை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) பி அண்ட் சி மில் பகுதியை வெள்ளப் பகுதியென அறிவிப்பது.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை. பொதுப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதை நான் பார்ப்பேன். நோட்டீஸ் கொடுக்காமல் குறுக்கு வழியில் நுழைந் தால் அதை நான் அனுமதிக்க மாட்டேன், நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விடும்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அடித்த வெள்ளத்தினால்—ஏற்கனவே பி. அண்ட் சி. மில் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள்—கூட்டுறவு சங்கம் அவர்களுக்கு கடன் கொடுப் பதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அதை வெள்ளப் பகுதி என்று அறிவித்து விட்டால் கூட்டுறவுச் சங்கம் அவர்களுக்கு கடன் கொடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெள்ள நிவாரணம் பற்றி இன்று மாலை 4 மணி முதல் விவாதம் நடக்க இருக்கிறது. (குறுக்கீடு) அப்போது தாங்கள் அதை எல்லாம் எடுத்துச் சொல்லி தேவையான பதிலைப் பெற்றுக்கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS